## சுற்றுலா பகுதியான

# மாமல்லபுரத்தில் பிளாஸ்டிக் பயன்பாட்டுக்கு தடை

## அமலுக்கு வந்தது

சென்னை, டிச. 3: சுற்றுலா பகுதியாக திகழும் மாமல்லபுரத்தில் பிளாஸ்டிக் பயன்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட தடை அமலுக்கு வந்தது.

வெளிநாடுகளில் இருந்து இந்தியாவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தாஜ்மகாலுக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் உள்ள மாமல்லபுரம் கடற்கரை கோயிலை பார்க்க விரும்புவதாக சுற்றுலாத் துறை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. யுனெஸ்கோ அமைப்பால் அங்கீகாரம் பெற்ற புராதன சின்னங்கள் பட்டியலிலும் மாமல்லபுரம் கடற்கரை கோயில் இடம் பெற்றுள்ளது.

அதுமட்டுமின்றி ஐந்து ரதங்கள், அர்ச்சுனன் தபசு, கலங்கரை விளக்கம் போன்ற பழமையான பல்லவர் காலத்து புராதன சின்னங்கள் மாமல்லபுரத்திற்கு பெருமை சேர்க்கின்றன. இருப்பினும், இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் வியாபாரிகள் பொது இடங்களில் வீசும் பிளாஸ்டிக் பைகளால் நகரமெங்கும் பிளாஸ்டிக் குவியலாக காட்சியளிக்கிறது. புராதன சின்னங்களை சுற்றிலும் பிளாஸ்டிக் கவர்கள், தண்ணீர் பாக்கெட்டுகள், பாட்டில்கள் வீசப்பட்டு சுற்றுலா பகுதி பொலிவிழந்து வருகிறது. பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் கூடும் இடங்களில் பேரூராட்சி நிர்வாகம் சார்பில், பல வண்ணங்களில் குப்பை தொட்டிகள் வைக்கப்பட்டும், பிளாஸ்டிக் கழிவுகளின் குவியல் குறைந்தபாடில்லை. எனவே, இப்பிரச்னைக்கு தீர்வாக, வரும் டிசம்பர் 1ம் தேதி முதல் மாமல்லபுரத்தில் சோதனை அடிப்படையில் பிளாஸ்டிக் பயன்பாட்டிற்கு தடை விதித்து பேரூராட்சி நிர்வாகம் உத்தரவிட்டது.



▶ மாமல்லபுரம் கலங்கரை விளக்கத்தின் மேலிருந்து நகர் பகுதி மற்றும் கடற்கரையை ரசிக்கும் சுற்றுலா பயணிகள்.

இதற்காக கடந்த நவம்பர் மாதம் முதலே விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்குதல், பேரணி நடத்துதல், வியாபாரிகள் சங்கங்களுடன் ஆலோசனை என பல்வேறு கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதைத்தொடர்ந்து கடந்த 1ம் தேதி முதல் பிளாஸ்டிக் தடை அமல்படுத்தப்படுவதாக பேரூராட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது. இதன்படி மாமல்லபுரம் நகரப் பகுதிக்குள் கடைகளில் பிளாஸ்டிக் பைகள், கப்புகள், டம்ளர்கள் பயன்பாடு முற்றிலும் தடை செய்யப்படுவதாக அறிவித்துள்ளது.

### மீறினால் ₹500 அபராதம்

பேரூராட்சி நிர்வாகத்தின் இந்த அறிவிப்பை மீறும் வியாபாரிகளுக்கு முதற்கட்டமாக 500 முதல் 1000 ரூபாய் வரை அபராதம் விதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து சுற்றுலாப் பயணிகள் அதிகம் வரும் விடுமுறை நாட்களாக கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) மகேஸ்வரன், சுகாதார ஆய்வாளர் ஸ்ரீதர், துப்புரவு மேற்பார்வையாளர் தாமோதரன் உள்ளிட்ட பேரூராட்சி ஊழியர்கள் அனைத்து பகுதிகளிலும் சென்று கடைகளில் பிளாஸ்டிக் பயன்பாடு உள்ளதா என ஆய்வு மேற்கொண்டனர்.

தினகரன் Mon, 03 December 2018
epaper.dinakaran.com/c/34556691